## 22-09-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு
## தலைப்பு : சமூக உற்பத்தியில் பெண்கள்
## தொடக்கவுரையாடல் : சி. சிவசேகரம்

ஆரம்ப காலத்தில் பெண்கள் வேட்டைக்குத் தலைமை தாங்கிசென்றதாக ஆய்வு உள்ளது அதற்கு ஆதாரம் உள்ளதா என ஒருவர் கேட்க அதற்கு சங்க இலக்கியங்களிலும் ஆதாரம் உள்ளதாக ஒருவர் குறிப்பிட்டார்.

பெண்வழி சமூகத்திலிருந்து ஆண்தலைமை தாங்கும் சமூகமாக எப்படி மாறியது எனக்கேள்வி எழுப்பப்பட்டது.
இதற்கு போர் ஒரு காரணம் என்று ஒருவரால் சொல்லப் பட அது பிழையான தகவல் என்று கூறி ஆரம்ப காலத்தில் ஆண்களுக்கு சமமாக பெண்களும் போரில் கலந்து கொண்டார்கள் என்ற கருத்து சொல்லப்பட்டது.
இந்த மாற்றத்திற்கு பெண்களின் கர்ப்பகாலம் ஒரு காரணமாக இருந்திருக்கலாம் ஏன் எனில் அந்த காலத்தில் சமூக செயற்பாடுகளில் பெண்ணின் பங்கு குறைவானதாக இருந்திருக்கும் என்றும் கூறப்பட்டது.
பெண்கள் ஒடுக்கி வைக்கப்பட்டதற்கு ஆணின் வாரிசுக்கான தேவைதான் முக்கியமானதாக இருக்கம் எனவும் கூறப்பட்டது.

சமூக உற்பத்தியில் நுண்ணறிவின் சம்பந்தம் பற்றி கேள்வி எழுப்பப் பட்டது. பெண்கள் ஆண்களைக் காட்டிலும் நுண்ணறிவை அதிகம் பயன் படுத்துகிறார்கள் என்றும் சொல்லப்பட்டது.
சமூக உற்பத்தியில் பெண்கள் வரலாற்று ரீதியாக நுண்ணறிவை பயன்படுத்திய விதம் பற்றி கேட்கப்பட்டது.

பெண்களுக்கு ஒரு நேரத்தில் பல வேலைகளை பார்க்கும் ஆற்றல இருப்பதால் சமூக உற்பத்தியில் பெண்கள் பங்கு அதிகமாக உள்ளதாகவும் கருத்து தெரிவிக்கப் பட்டது.

இப்போது சில துறைகளில் இருந்து பெண்கள் ஒதுக்கி வைக்கப்படக் காரணம் கேட்கப்பட்டதற்கு சமூகமும் அதன் திணிப்புக்களும் தான் காரணம் எனக்கூறப்பட்டது.

பண்பாடுகள் பெண்களுக்கான தடைக்கு இன்னும் ஒரு காரணம் எனவும் கூறப்பட்டது.

தற்போதைய சூழலில் சில துறைகளுக்கு பெண்கள் அதிகமாக சேர்த்துக் கொள்ளப்படுவதாகவும் காரணம் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் வளர்க்கப்படுவதால் அவர்கள் நிர்வாகத்தை எதிர்த்து கேள்வி கேட்பதில்லை மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள் செய்ய மாட்டார்கள் என்பதும் காரணமாக உள்ளதாக சொல்லப்பட்டது. இதே காரணங்கள்தான் பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாக சேர்க்கப்படவும் காரணம் எனவும் சொல்லப்பட்டது. அடக்கி வைத்து வளர்க்கப்பட்டதால் இப்போது பெண்களுக்கு போராட வேண்டும் என்ற நோக்கமும் வெகுவாக இல்லாமல் போய்விட்டதாகவும் கருத்து சொல்லப்பட்டது.

பிறப்பு ரீதியில் ஒருகுழந்தை ஆண் பெண் என்றுதான் தீர்மானிக்கப் படுவதாகவும் அதக்குரிய பெரும்பான்மையான பண்புகள் சமூகத்தால் தான் தீர்மானிக்கப் படுவதாகவும் சொல்லப்பட்டது.
விளையாட்டு பருவத்தில் பெண்ணுக்கும் ஆணுக்கும் விளையாட்டுப் பொருட்கள் வாங்கித்தருவதிலிருக்கும் வித்தியாசம் கூட பெண்ணின் பண்பில் மாற்றம் ஏற்படுத்துவதாகவும் சொல்லப்பட்டது. அதன் பின் பாடசாலை அதில் இன்னும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

பெண்ணிற்கு இரண்டு வகை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறாள் ஒன்று பண்டம் சார் உற்பத்தி மற்றையது இனவிருத்தி எனப்படும் மறுஉற்பத்தி எனவும் சொல்லப்பட்டது.

ஆணின் அடக்குமுறை என்பது வந்தபிறகே பெண் பாலியல் தொழில் என்பது உருவானதாகவும் சொல்லப்பட்டது. பதிவிரதைத் தன்மை கற்பு தேவதாசி தாசி விதவை என்ற சமூக அந்தஸ்துகள் ஆணாதிக்கம் ஏற்பட்ட தன் பின்புதான் தோன்றியதாக சொல்லப்பட்டது.

சமூகம்தான் பெண்ணின் சமூக உற்பத்தியை தீர்மானிக்கின்றது அதுமட்டும் அல்லாமல் சமூகமே அதற்கான பெறுமதியையும் தீர்மானிக்கிறது
பெண்களின் சொத்துரிமை குறித்தும் பேசப்பட்டது இதன் போது தேசவழமை சட்டம் பற்றியும் பேசப்பட்டது.
விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெண்களின் பங்கு குறித்தும் பேசப்பட்டது.

### அடுத்து வரும் தலைப்புக்கள்

மலையகத் தொழிற்சங்கங்களும் மாற்றுத் தொழிற்சங்கமொன்றின் தேவையும்
29-09-2011 | து. பிரபாகரன்

9 / 30

விக்கிப்பீடியா
கட்டற்ற கலைக்களஞ்சியம்

30-09-2003 அன்று கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிபீடியாவின் தமிழ்த் தளம் தன்னார்வலர்களால் தொடக்கப்பட்டது.

காப்புரிமை, பதிப்புரிமை சிக்கல்கள் இல்லாமல் அனைவருமே தடையற்று எந்நோக்கத்துக்காகவும் பயன்படுத்தக்கூடிய வகையில் அமைந்த கட்டற்ற திறந்த கலைக்களஞ்சியமே விக்கிபீடியாவாகும். தமிழ் கலைக்களஞ்சியமானது பல்வேறு விடயப்பரப்புக்களிலும் அமைந்த 37,000 இற்கும் மேற்பட்ட கட்டுரைகளை இன்று கொண்டிருக்கிறது.

எவரும் தன்னார்வமாக தொகுக்கக்கூடியவண்ணம் அமைக்கப்பட்டிருக்கும் இக்கலைக்களஞ்சியத்தின் தமிழ்த்தளத்தை ஏராளமான தன்னார்வலர்கள் நாள்தோறும் தொகுத்தும் வளர்த்தும் வருகிறார்கள். இக்கலைக்களஞ்சியத்திட்டத்தில் நீங்களும் பங்கெடுக்கலாம்.

தமிழ் விக்கிபீடியாவின் இணைய முகவரி : ta.wikipedia.org

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## மலையகத் தொழிற்சங்கங்களின் இன்றைய நிலையும் மாற்றுத் தொழிற்சங்கம் ஒன்றின் தேவையும்

*29-09-2011 அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு - மார்க்ஸ் பிரபாகர்*

தற்போதுள்ள தொழிற்சங்கங்கள் வருமானம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றம் பெற்றுள்ளன.

தொழிற்சங்கங்களின் நோக்கமும் கொள்கையும் பின்தள்ளப்பட்டு தொழிலாளர்களை வெறும் அரசியல் பகடைக்காய்களாய் நகர்த்தப்படும் நிலையே இன்று காணப்படுகிறது.

தொழிலாளிகளின் தேவை சார் போராட்டங்களின் போது போராட்டத்தை தொடங்குவதற்கான தூண்டுதலை வழங்கி விட்டு தமது சுயலாபத்திற்காக போராட்டங்களில் பங்குகொள்ளாமல் விடல்.

மாற்றுத் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களுக்கு இழைக்கப்படுகின்ற எல்லா கொடுமைகளையும் தொற்கடிக்கின்ற உண்மையாகவே அவர்களுக்கு உதவி புரியும் அமைப்பாக இருக்க வேண்டும்.

மாற்றுத் தொழிற்சங்கங்கள் என்று சொல்லித் தொடங்கப்பட்ட சில தொழிற்சங்கங்களும் மூலத்தில் இருந்து பிரிந்து வந்தவை என்பதால் ஆரம்பத்தில் ஆரோக்கியமான விடயங்களை செய்திருப்பினும் பின்னாளில் அவையும் மற்றவை போலவே நடந்துகொண்டன.

மாற்றுத் தொழிற்சங்கம் பற்றிச் சிந்திப்பவர்கள் மேற்குறித்த விடயங்களில் கவனம் செலுத்த முடியாது போகுமேயானால் தொடக்கத்திலேயே அந்த முயற்சியை கைவிடுவது அந்த உழைக்கும் மக்களுக்கு செய்யும் பெருதவியாகும்.

## வலை

### விபச்சாரத்தை ஏன் அங்கீகரிக்க கூடாது?

விபசாரத்தின் வரலாற்றுப் பொருளாதார அடிப்படைகளையும், கற்பு நெறியின் பின்னால் ஒளிந்துகொண்டிருக்கும் தொத்துக் காப்பாற்றும் மனநிலையையும் விபசாரம் என்கிற பால்வினைத்தொழில் எவ்வாறு பச்சை முதலாளியச் சுரண்டலாகிறது என்பதையும் மனிதக்காதல் சாத்தியப்படக்கூடிய சுதந்திரச்சமூகத்தில் விபசாரத்தின் தேவை ஏன் இல்லாமற்போய்விடும் என்பதையும் விளக்கும் கட்டுரை

இலகு முகவரி : **valai.thulaa.net/39**

http://www.vinavu.com/2011/09/28/prostitution/

### Short film : The Accordion. by Jafar Panahi

வீதிகளில் இரக்கும் இரு சிறுவர்களை மையப்பாத்திரங்களாகக்கொண்டு ஏழ்மையையும் மனித உறவுகளையும் அராபியச் சூழலில் அழகாகப் படம்பிடித்துள்ள குறும்படம்.

இலகு முகவரி : **valai.thulaa.net/42**

http://www.youtube.com/watch?v=J0qDkHB6XCI

### தினக்குரல் ஊழியர்கள் விடயத்தில் ஊடகத்துறை மௌனம்!!

உதயன் ஊடகவியலாளரை இனந்தெரியாதவர்கள் அடித்தனர் என்றதற்காக போராடிய இந்த ஊடகவியலாளர்கள் தினக்குரல் விடையத்தில் மௌனம் சாதிப்பதன் உண்மை நோக்கம் என்ன?

இலகு முகவரி : **valai.thulaa.net/41**

http://www.ndpfront.com/?p=24583

### 'முர்டோச் மயமாக்கப்படும்' இந்திய ஊடகங்கள்!

STAR Network அறிமுகப்படுத்திய புதிய தொலைக்காட்சி நிகழ்ச்சிப்போக்குகள் இன்று இந்திய தொலைக்காட்சிகளை ஆட்டிப்படைக்கிறது. தமிழிலும் STAR VIJAY தொலைக்காட்சி மூலம் இவ்வாறு அமெரிக்க நிகழ்ச்சிகளின் இந்திய மயமாக்கப்பட்ட வடிவம் புகுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிகளின் பின்னால் அறத்தை மீறிய ஒட்டுமொத்த வணிகமயமாக்கப்பட்ட ஊடக நசிவு உள்ளது. அதைப்பற்றி விளக்கும் கட்டுரை இது.

இலகு முகவரி : **valai.thulaa.net/40**

http://www.vinavu.com/2011/09/20/murdochisation-of-the-indian-media/

## வேலைவாய்ப்பு ! தேவை : இல்லத்தரசி.

**வேலை நேரம் :** ஒருநாளைக்கு 24 மணி நேரம்

**வேலை நாட்கள்:** வாரத்தில் எழு நாட்கள்

**விடுமுறை :** இல்லை

**விழா நாட்கள் :** உண்டு அன்று கூடுதலான வேலைகள் இருக்கும்.

**நோய்க் கால ஓய்வு:** இல்லை

**வேலைப் பாதுகாப்பு:** ஆண் குழந்தை பெற்றால் குறைந்தது 5 ஆண்டுகள் பாதுகாப்பு உண்டு

**செய்யவேண்டிய வேலைகள்:**

1. ஒருநாளைக்கு 4 முறை சமைப்பது
2. வீட்டை சுத்தம் செய்தல்
3. பாத்திரங்களையும் உடைகளையும் சுத்தம் செய்தல்
4. நீர், விறகு போன்றவை கொண்டுவருதல்
5. பிள்ளை பெறுதல், வளர்ப்பு நோயாளி முதியோர் பராமரிப்பு
6. கணவனை மகிழ்வித்தல் பணிவிடை செய்தல்
7. வேலை செய்து ஊதியம் பெற்றால் அதை கணவனிடம் தந்துவிடல்

**தேவையான திறன்கள்:** வீட்டு நிர்வாகம்,சமையல்கலை நுட்பம்,காமக் கலை நுட்பம்,பிள்ளை வளர்ப்பு நுட்பம், அழகியல் கலை நுட்பம், கடுமையான உடல் உழைப்பு,வசை மொழிகளையும் அடி உதைகளையும் பொறுமையாக ஏற்றல்,நோய் தாங்கும் திறன், கணவனை(தீய பழக்கங்கள் இருபினும்) தெய்வமாக போற்றுதல்,கற்பு நிலை போற்றுதல்.

**ஊதியம் :** இல்லை உடலில் உயிர் நிலைக்க விருப்பினால் உணவு, மருத்துவ வசதிகள் வழங்கபடும்,அழகு சாதனப் பொருட்களும் வழங்கபடும்.

**தகுதி:** 16 -20 வயது உடைய கன்னிப்பெண் சிவந்த அழகி, அறிவு,செல்வம், கீழ்படிவும் அடிமைத்தனமும், அதிக சீதனப் பணமும் சொத்துக்களும் கொண்டுவந்து தொழில் தருபவருக்குக் கொடுக்கவேண்டும்..

[மேலே கூறப்பட்ட வேலைக்கு உழைப்புச் சமன்பாட்டின்படி ஊதியம் வழங்க முடியுமா, இவ்வளவு வேலைகளையும் செய்யும் குடும்பப் பெண்ணை வேலை செய்யாது சும்மா இருப்பவள் எனக்கூறுவது பொருந்துமா, சிந்தியுங்கள் பெண்ணின் இத்தகைய பணிகள் ஒவ்வொன்றிற்கும் குறைந்த பட்ச ஊதியம் வழங்கினாலும் முதலாளித்துவப் பொருளாதாரம் சீர் குலைந்துவிடும் என அமெரிக்க முன்னணி பொருளியல் அறிஞர் ஒருவர் கூறியுள்ளார். இதன் பொருள் நாம் பெண்களின் ஊதியம் அற்ற உழைப்பை சுரண்டுகின்றோம்.

பெண்கள் ஆண்களை விட கடினமான வேலைகளை செய்தாலும் அவர்களுக்கு ஆண்களைவிட குறைந்த ஊதியமே வழங்கப்படுகின்றது.]

-ராஜரட்ணம்

**சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**